# நிகாஹ் செய்து வைக்கும்போது ஓதவேண்டிய க்ஹு த்பா

أَلْحَمْدُ لِلَّهِ، نَحْمَده، وُنَسْتَعِينه، وَنَسْتَغْفِره، وَنؤْمِنُ بِهِ، وَنَتَوَكَّل عَلَيْهِ، وَنعوذ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفسِنَا وَمن سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ، فَلاَ مضِلَّ لَه، وَمَنْ يُضْلِلْه، فَلاَ هَادِيَ لَه، وَنَشْهَد أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَنَشْهَد أَنَّ محمَّدًا عَبْده وَرسوله.

فأعوذ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيم، بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيم: يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱتَّقُوا۟ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُم مِّن نَّفْسٍ وَٰحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَآءً ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ٱلَّذِى تَسَآءَلُونَ بِهِۦ وَٱلْأَرْحَامَ ۚ إِنَّ ٱللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا ﴿١﴾ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ﴿١٠٢﴾ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا ﴿٧٠﴾ يُصْلِحْ لَكُمْ أَعْمَٰلَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَمَن يُطِعِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ﴿٧١﴾

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ النِّكَاحُ مِنْ سُنَّتِي، وَقَالَ عَلَيْهِ السَّلاَم، وَأَتَزَوَّجُ النِّسَاءَ، فَمَنْ رَغِبَ عَنْ سنَّتِي فَلَيْسَ مِنِّي، قَالَ عَلَيْهِ السَّلاَم: تَزَوَّجوا الْوَدود الْوَلود فَإِنِّي مكَاثِرٌ بِكمُ الأُمَمَ

www.uzairfalahi.com

பொருள்: புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, நாங்கள் அவனையே புகழ்கின்றோம், அவனிடமே உதவி நாடுகிறோம், அவனிடம் பாவமன்னிப்புக் கோருகின்றோம், அவன்மீது ஈமான் கொள்கின்றோம் மேலும், அவனையே நாடியும் இருக்கின்றோம். நாம் எங்களுடைய நஃப்சுகளின் தீங்கிலிருந் தும், எங்கள் தீய செயல்களிலிருந்தும் அவனுடைய பாதுகாப்பு தேடுகின்றோம். அல்லாஹ் யாரைநேர்வழியில் நடத்துகின்றானோ அவரைவழிகெடுப்பவன்யாரும் இருக்க முடியாது, ஆனால், யாரை அல்லாஹ்வே வழிகேட்டில் விட்டுவிடுகின்றானோ அவரைநேர்வழியில்செலுத்துவோரும் யாருமில்லை.

சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் புகலிடம் தேடியவனாக, அருளாளனும் மிக்க அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு துவங்குகிறேன்.

*மனிதர்களே, உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள், மேலும், அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான். மேலும், அவை இரண்டின் மூலம் உலகில் அதிக மான ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான். மேலும், எந்த அல்லாஹ் வின் பெயரைக்கூறி நீங்கள் ஒருவர் மற்றவரிடம் உரிமைகளைக் கோருகின்றீர் களோ, அந்த அல்லாஹ்வுக்கே நீங்கள் அஞ்சுங்கள், மேலும், இரத்த பந்த உறவு களை சீர்குலைப்பதிலிருந்து நீங்கள் விலகி வாழுங்கள், திண்ணமாக, அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் உங்களைக்கண்காணித்துக்காண்டிருக்கின்றான்.*

*இறைநம்பிக்கைக் கொண்டவர்களே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள், மேலும், நீங்கள் முஸ்லிமாக அன்றி மரணமடைய வேண்டாம்.*

*நம்பிக்கைக் கொண்டவர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், மேலும், நேர்மை யான சொல்லையே மொழியுங்கள், அல்லாஹ் உங்களுடைய செயல்களைச் சீர்த் திருத்திவிடுவான், மேலும், உங்களுடைய குற்றங்களை மன்னிக்கவும் செய் வான். எவன் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிகின்றானோ அவன் மகத்தான வெற்றி அடைந்துவிட்டான்.*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: நிகாஹ் செய்துகொள்வது என்னு டைய சுன்னத்தான வழியாகும், மேலும், அவர்கள் ﷺ கூறுகிறார்கள்: நான் பெண்களைத் திருமணம் செய்துகொள்கின்றேன், யார் என்னுடைய சுன்னத்தை வெறுக்கின்றார்களோ அவர்கள் என்னைச் சார்ந்தவர்களல்ல. அவர்கள் ﷺ மேலும் கூறுகிறார்கள்: நீங்கள் கணவனை நேசிக்கக்கூடிய, மிகுந்த மகப்பேறு டைய, அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடியை பெண்களை மணந்து கொள்ளுங்கள், ஏனெனில், நான் மறுமைநாளில் உங்களின் எண்ணிக்கையைக் கொண்டு மற்ற உம்மத்தினர்மீது பெருமை கொள்வேன்.

குறிப்பு: நிகாஹ்வுக்கான க்ஹுத்பா நிகழ்த்திய பிறகு சாட்சிகளை முன்வைத்துக் கொண்டு ஈஜாப் ஃகுபூல் என்ற மணமக்கள் இருவருரிடமும் ஒப்புதலைப் பெற வேண்டும், அதன்பின் துஆ ஓதவேண்டும். நிகாஹ் விஷயத்தில் சிக்கனமாக நடந்துகொள்ளவேண்டும், சுன்னத்தான முறையைத்தவிர அல்லது ஷரீஅத் சட் டங்களுக்கு முரணான எந்த ஒன்றையும் செய்யக்கூடாது. மஹர் தொகை ஒருவர் எளிதாகவே செலுத்தும் வகையில் அமையவேண்டும், எதுவாயினும், அது செலுத்தப்பட வேண்டும். சிறந்தது நிகாஹ் நடைபெறும் சமயத்திலே செலுத்தி விடுவதாகும்.

நினைவிருக்கட்டும்: சீர்வரிசை அல்லது ஒரு தொகையை பெண்வீட்டாரிட மிருந்து வற்புறுத்திக்கேட்பது ஷரீஅத்திற்குப் புறம்பானதுமட்டுமல்லாது ஒரு இழிவான செயலுமாகும், நீங்களும் இவ்வாறு கேட்காதீர்கள், கேட்பவர்களை யும் ஆதரிக்காதீர்கள்.

* * *

www.uzaifalahi.com